21.07.2025

அ.வ.எண்.338/2017

வா.சா.1 - சித்ரா, க/பெ.கணேஷன்

Solemnly affirmed and sworn by Tmt.R.Lakshmi, Junior Assistant on 21.07.2025 is accordance with the provision of Act X of 3331

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை ஆவணம் மூலமாக வழக்கு சொத்து பாத்தியப்பட்டது என்று சொல்கிறேன் என்றால் சரிதான். பாகப்பிரிவினை யார் யாருக்கு இடையில் ஏற்பட்டது என்றால் தெரியாது. பாகப்பிரிவினையின் படி கந்தசாமி பண்டாரம் மற்றும் பேச்சிமுத்து பண்டாரமும் அனுபவம் செய்வதாக சொல்கிறேன் என்றால் சரிதான். மேற்படி நபர்கள் அனுபவம் செய்ததை காட்ட ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எனது பிரமாண வாக்குமூலத்தில் மேற்படி நபர்களின் அனுபவத்தை காட்ட என்ன ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் வழக்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன்.

2. நான் சொல்வது போல் வழக்கு சொத்தில் கந்தசாமி பண்டாரம் மற்றும் பேச்சிமுத்து பண்டாரமும் வழக்கு சொத்தை அனுபவம் செய்ததற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் உள்ள வீட்டை யார் கட்டினார்கள் என்று சொல்லவில்லை என்றால் வீடு உள்ளது என்று சொல்லியுள்ளேன் யார் கட்டியது என்று தெரியாது. வழக்கு சொத்தில் வீடு இருப்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் பத்திரத்தில் தான் உள்ளது. நான் புகைப்படம் தாக்கல் செய்யவில்லை.

3. கந்தசாமி பண்டாரம் மற்றும் பேச்சிமுத்து பண்டாரம் இறப்பிற்கு பின்னிட்டு நான் அனுபவம் செய்து வருவதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் பத்திரம் உள்ளது. பத்திரத்தை வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம். பத்திரம் இந்த வழக்கில் எத்தனையாவது ஆவணமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது, நான் படிக்கவில்லை. நான் வழக்குரையை படித்து பார்த்துள்ளேனா என்றால் எனது மகன் படித்து பார்த்து

சொன்னார். எனது மகன் படித்து காட்டியபோது வழக்கு சொத்தில் அனுபவத்தில் இருப்பதற்கான ஆவணம் தாக்கல் செய்துள்ளதாக சொன்னாரா என்றால் அனைத்து ஆவணங்களையும் கொடுத்துள்ளேன். நான் வழக்கு சொத்தை அனுபவம் செய்து வருவதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

4. பிரதிவாதிகள் எனது சொத்திற்கு தென்-மேற்கு திசையில் உள்ளனர். பிரதிவாதிகள் தென்-மேற்கு திசையில் உள்ளனர் என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தை காட்டி என்ன ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்று கேட்டபோது நான் படிக்கவில்லை என்று சாட்சியம் அளிக்கிறார். சொத்து விவரத்தில் பிரதிவாதிகள் இடம், எந்த இடத்தில் உள்ளது என்றால் மேற்கு-தென் திசையில் உள்ளது.

5. எனது சொத்து விவரத்தில் கிழக்கு திசையில் நாவீதன் மடம் தான் உள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் நாவீதன் மடத்திற்கு கிழக்கு என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்கில், தேர்க்கல் உள்ளது. எனது வழக்-குரை சொத்து விவரத்தில் நஞ்ச பண்டாரம் மற்றும் திருமூர்த்தி பண்டாரம் இவர்கள் வீட்டிற்கு போகும் தடத்திற்கு மேற்கு என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் பத்திரத்தில் அவ்வாறு தான் உள்ளது. எனது சொத்தின் தென்-மேற்கு திசையில் பிரதிவாதிகள் அத்துமீறி நுழைந்து ஆக்கிரமிப்பு செய்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்கு திசையில் உள்ள நாவீதன் மடத்தை சேர்த்துள்ளேனா என்றால் மடத்திற்கும், எங்களுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை, நாவீதன் மடத்திற்கு கிழக்கே என சொல்லியுள்ளேன்.

6. நஞ்ச பண்டாரம் மற்றும் திருமூர்த்தி பண்டாரம் ஆகியோர்களை இந்த வழக்கில் சேர்த்துள்ளேனா என்றால் இல்லை. திருத்தப்பட்ட வழக்குரை 2 ம் பத்தியில் ஆவணங்களை பரிசீலனை செய்ததாக சொல்லியுள்ளேன் என்றும், என்ன ஆவணங்களை பரிசீலனை செய்தேன் என்றால் தாய்ப்பத்திரம் தான் பார்த்தேன். வழக்கு சொத்தின் வருவாய் ஆவணங்களான பட்டா, மற்றும் சிட்டா ஆவணங்களை நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிகளை எந்த தேதியில், எங்கு

சந்தித்தேன் என சொல்லவில்லை என்றால் தேதி தெரியாது. என் கணவரை அழைத்து பேசினார்கள் எனக்கு தேதி தெரியாது. என் கணவரை அழைத்து பேசினார்கள் என வழக்குரை மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் தெரியாது.

7. இது சம்மந்தமாக பிரதிவாதிக்கு வழக்கறிஞர் அறிவிப்போ அல்லது கடிதமோ அனுப்பினேனா என்றால் இல்லை. அவர்கள் தான் எங்கள் குடும்பத்தில் உள்ள 7 நபர்களுக்கும் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார்கள். மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பை தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியாது. நான் சொல்வது பொய் என்றும், பிரதிவாதிகள் எந்த வழக்கறிஞர் அறிவிப்பும் அனுப்பவில்லை என்றும் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சாட்சி மீண்டும் நான் வீட்டிற்கு சென்று பார்த்து இருந்தால் கொண்டு வந்து தருகிறேன். வா.சா.ஆ.2 சூலூர் காமநாயக்கன்பாளையம் காவல் நிலையத்தில் 01.10.2012 ம் தேதியிட்ட புகார் மனு ரசீது மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றால் நீதிமன்றத்தில் சென்று பார்த்து கொள்ளுமாறு சொன்னார்கள். வாதி, பிரதிவாதிகளை காவல் நிலையத்தில் அழைத்து விசாரித்து நான் கொடுத்த புகார் பொய்யானது என தெரிந்து அதன் மீது நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் நீதிமன்றத்தில் பார்த்து கொள்ளுமாறு சொன்னார்கள்.

8. கந்தசாமி பண்டாரம் எனக்கு தாத்தா முறை ஆவார். கந்தசாமியின் மனைவி பேச்சியம்மாள். பச்சையம்மாள் என்பது பேச்சியம்மாளின் இன்னொரு பெயர் ஆகும். மேற்படி விவரத்தை வழக்குரை மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் ஆமாம். பேச்சியம்மாள் கணவர் பெயர் அய்யாசாமி பண்டாரம் என்ற நபர் யார் என்றால் பேச்சியம்மாள் எனது பாட்டி முதலில் அய்யாசாமி என்பவருடன் இருந்தார்.பின்னிட்டு என் தாத்தாவை திருமணம் செய்து கொண்டார். பேச்சியம்மாள் எனது பாட்டி என் தாத்தாவை திருமணம் செய்து கொண்டார் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியாது.

9. பேச்சியம்மாள், அய்யாசாமி பண்டாரத்துடன் வாழ்ந்தபோது எத்தனை குழந்தைகள் என்றால் குழந்தைகள் இல்லை, அதற்கு ஆவணம் தாக்கல் செய்ய முடியுமா என்றால் இல்லை. நான் சொல்வது பொய் என்றும், பேச்சியம்மாள் மற்றும் பச்சையம்மாள் வேறு வேறு நபர்கள் என்றும் பச்சையம்மாளின் சொத்துக்களை அபகரிக்க வேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பேச்சியம்மாளுக்கும், எனது தாத்தா கந்தசாமி பண்டாரத்திற்கம் எத்தனை குழந்தைகள் என்பதை நிரூபிக்க ஆவணம் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். வாரிசு சான்றிதழை தாக்கல் செய்துள்ளேன். நான் அவ்வாறு வாரிசு சான்றிதழை தாக்கல் செய்யவில்லை என்றும், தாக்கல் செய்துள்ளதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

10. நானும், என் அம்மாவும் நாவீதன் மடத்திற்கு சொந்தமான சொத்தினையும், மேலும் பச்சையம்மாள் க/பெ. அய்யாசாமி பண்டாரம் ஆகியோர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்தினை அபகரிக்க வழக்கு சொத்தில் எனக்கு எந்த அதிகாரமும், உரிமையும், அனுபவமும் இல்லாமல் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றும், வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் அவ்வாறு இல்லை. நான் தான் சொத்தின் உரிமையாளர்.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct

Sd./M.Santhosham
District Munsif, Sulur